# அமைதியும் ஆனந்தமும் அளிக்கும் ஆலயம்

மனதுக்கு சாந்தியளிக்கும் அமைதியும் இனம் புரியாத ஆனந்தமும் அளிக்கும் திருத் தலமாக விளங்குகிறது, அந்த இடம். ஸ்ரீ சக்கரை அம்மாவின் துதியும், லலிதா சஹஸ்ர நாமமும் மென்மையான குரலில் இனிய ஒலியாக எங்கும் பரவும் இசை, சூழலின் தூய்மையை மேலும் மேம்படுத்துகின்றது. சுற்றிலும் சூழ்ந்துள்ள மரம், செடி, கொடிகளில் பூத்துக் குலுங்கும் பல்வேறு மலர்களின் நறுமணம் காற்றில் கரைந்து சுவாசத்திற்கே சுகமளிக்கிறது. எத்தகைய சஞ்சலத்திற்கு உள்ளான மனமாக இருந்தாலும், எவ்வளவு கவலைகளால் அலைக்கழிக்கப்படும் நிலை இருந்தாலும், உள்ளே நுழைந்தவுடனே அதுவரை காணாத அமைதியையும் ஆனந்தத்தைம் அளிக்கும் அந்த இடந்தான், ஸ்ரீ சக்கரை அம்மாவின் எழிலார்ந்த ஆலயம். பார்த்த மாத்திரத்தில் இது வழக்கமாகக் காணப்படும் கோயில்களைப் போன்றதல்ல என்பது புரிந்து விடுகிறது.

இதழ்களில் புன்னகை தவழ, மோனத் தவத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ சக்கரை அம்மாவின் அருட் பார்வை அதிர்வலைகள் கருவறையிலிருந்து வெளிப்பட்டு, மேனியில் படர்ந்ததும், முன் எப்போதும் உய்த்துணர்ந்திராத தெம்பும் தன்னம்பிக்கையும் ஊற்றுப் போல் சுரந்து, உடலில் உள்ள சக்தி சக்கரங்கள் யாவும் புதுப்பிக்கப்படுகின்றன. பெற்றெடுத்த தாயைப் போன்று பரிவும் கருணையுமே உருவெடுத்த ஸ்ரீ சக்கரை அம்மா, தன்னிடம் வரும் பக்தர்களைத் தனது குழந்தைகளாகவே ஏற்று அவர்கள் வேண்டுவதை வழங்குகிறாள். மேலும் அக்கறையுள்ள உண்மையான தாயைப் போலவே தன் குழந்தைகளுக்கு நலம் தரக்கூடியது எதுவோ அதையே பாசத்துடன் அளிக்கிறாள்..

சென்னை திருவான்மியூரின் அமைப்பினை நன்கு அறிந்திருப்பவர்களுக்கு ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்தைக் கண்டறிவதில் எவ்வித சிரமமும் இருக்க வாய்ப்பில்லை. கலாக்ஷேத்ரா சாலையும், லட்சுமிபுரம் காமராஜர் சாலையும் சந்திக்கும் இடத்திற்குச் சிறிது அருகாமையிலேயே அமைந்துள்ளது, ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயம்.

ஆலயத்தில் இரண்டு சிறு மண்டபங்களைக் காண்கிறோம். இவற்றுள் ஒன்று பஜனைக் கூடமாகவும் இன்னொன்று ஆன்மிகச் சொற்பொழிவும் பக்திப் பாடல்களும் நிகழும் அரங்காகவும் பயன்படுகின்றன. வியாழக் கிழமை தோறும் காலையில் அனுபவம் மிக்க மருத்துவர்கள் சாதி, சமய வேறுபாடு இன்றி இலவசமாகப் பரிசோதித்துச் சிகிச்சை அளிக்கும் நிகழ்ச்சி ஒரு மண்டபத்தில் இடம் பெறுகிறது. 'டாக்டர் எம்.ஸி.என். ஹால்' என்று இந்த மண்டபத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. திருவான்மியூர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சமிதியினர் நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெறுகின்றன. இதேபோல்

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை மாலையில் பகவான் ரமணர் சத் சங்கத்தின் ஆன்மிக நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. பகவத் கீதை போன்ற தெய்விகத் தத்துவங்களின் உண்மைகளை விளக்கும் உரைகளும் அபிராமி அந்தாதி போன்ற பாமாலைகளின் கருத்துரைகளும் வாரந்தோறும் நடைபெறுகின்றன. குழந்தைகளுக்குக் கலைகளும் கைவினையும் தோத்திரப் பாடல்களும் கற்றுக் கொடுக்கும் வகுப்புகளும் இங்கு நடத்தப்படுகின்றன.

ஆலயத்தின் தனிச் சிறப்பு, இங்குள்ள விசாலமான தியான மண்டபந்தான். இயற்கை எழில் சூழ்ந்த இங்கு யார் வேண்டுமானாலும் எவ்வித இடையூறு மின்றி நெடு நேரம் தியானத்தில் அமர்ந்திருக்கலாம். தியானம் செய்வதற்கு அமர்வதற்காகவென்றே சிறு சதுரப் பாய்களும் ஓரிடத்தில் சுருட்டி வைக்கப் பட்டிருக்கின்றன. மண்டபத்தின் பீடத்தில் ஸ்ரீ சக்கரை அம்மாவின் தத்ரூபச் சிலை வடிவம் அருட் பார்வையை அன்பர்கள் மீது விசி அவர்களின் தியானம் உடனடியாகக் கைகூடச் செய்து, ஆனந்தப் பரவசத்தை சாத்தியப்படுத்துகிறது. பீடத்தின் சுவர்களை அண்ட சராசரங்களின் இடையறாத பேரசைவினைப் புலப்படுத்தும் நடராஜப் பெருமானின் திருவுருவும், அன்பின் சின்னமான கண்ணபிரானின் அழகு வடிவமும், அமைதிக்கு அடையாளமாம் புத்த பிரானின் தோற்றப் பொலிவும் அலங்கரிக்கின்றன.

ஸ்ரீ சக்கரை அம்மாவின் பிரதான சீடர் டாக்டர் எம்.சி. நஞ்சுண்ட ராவ் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, 1901-ல் அம்மாவின் மகா சமாதியின் மீதாக இந்த ஆலயம் எழுப்பப்பட்டது. அம்மாவின் சகோதரரும், சென்னை கோமளீஸ்வரன்பேட்டை சட்டநாத மடம் அதிபருமான சிவஸ்ரீ அருணாசல சிவாசாரியர் 1901-ல் கும்பாபிஷேகம் செய்வித்து, நித்திய பூஜைகளையும் தொடங்கி வைத்தார். அவரது மறைவிற்குப்பின், அவரது சந்ததியாரான சிவஸ்ரீ சேஷாத்திரி சிவாசாரியார், சிவஸ்ரீ தியாகராஜ சிவாசாரியார் ஆகியோர் பூஜை, அர்ச்சனை முதலானவற்றைத் தொடர்ந்து செய்து வந்தனர். தற்சமயம் அந்தப் பரம்பரையில் வந்த சிவஸ்ரீ பாலசுப்பிரமணீய சிவாசாரியாரும் அவரது புதல்வர்களும், அர்ச்சனை, அபிஷேக, அலங்கார ஆராதனைகளை முறைப்படிச் செய்து வருகின்றனர்.

ஸ்ரீ சக்கரை அம்மாவின் பிரதான சீடராக விளங்கி அவரது பெருமையை எங்கும் பரவச் செய்து வந்த டாக்டர் நஞ்சுண்ட ராவ், எந்நேரமும் தாம் ஸ்ரீ அம்மாவுடனேயே இருந்துகொண்டிருக்க விழைந்திருக்கக்கூடும். இதனை உணர்த்துவதே போல், டாக்டர் நஞ்சுண்ட ராவ் மறைந்தபின் அவரது உடலும் ஆலய வளாகத்திலேயே கருவறைக்கு அருகாமையில் அடக்கம் செய்யப்பட்டு சமாதியின் மேல் அவரது மார்பளவுச் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

ஸ்ரீ சக்கரை அம்மா தமது ஸ்தூல சரீரத்தைத் துறக்குமுன், தமது சமாதியின் மீது உருவாகும் கோயில் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகுதான் பிரசித்தம்

அடைந்து நாலா திசைகளிலிருந்தும் பக்தர்கள் தேடிவரச் செய்யும் என்று டாக்டர் நஞ்சுண்ட ராவிடம் தெரிவித்தாராம். இதனை மெய்ப்பிக்கும் வகையில், இடையிலே பல்வேறு சிக்கல்கள் சூழ்ந்து, வெயிலில் வைத்த அகல் விளக்குப் போல் மங்கியிருந்த ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயம், சரியாக ஒரு நூற்றாண்டிற்குப் பின் 2001-ல் புனருத்தாரணம் செய்யப்பட்டு, 2002-ல் மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அது முதல், சிறுகச் சிறுக, ஸ்ரீ சக்கரை அம்மாவின் அருமையும் பெருமையும் வெளியே பரவத் தொடங்கின. பக்தர்கள் வரலானர்கள். ஸ்ரீ அம்மாவின் தரிசனத்தால் பயன் பெற்ற அவர்கள், தங்கள் அனுபவத்தைப் பிறரிடம் பகிர்ந்துகொண்டனர். அதன் விளைவாக மேலும் அதிக அளவில் அன்பர்கள் ஆலயத்தைத் தேடி வந்து ஸ்ரீ அம்மாவை வழிபட்டுப் புத்துணர்வு பெறலாயினர். ஊடகங்கள் ஸ்ரீ சக்கரை அம்மாவைப் பற்றியும் அவரது ஆலயத்தின் தனிச் சிறப்பினையும் விவரித்து, விரிவான கட்டுரைகளை வெளியிட்டன. ஆன்மிகத்தில் ஈடுபட்டு முன்னேற்றம் அடைந்தவர்களும் ஆலயத்திற்கு வந்து ஸ்ரீ சக்கரை அம்மாவின் அருளால் பேரானந்த உணர்வில் திளைக்கலாயினர். இன்று மெய்யனபர்கள் பலரும் வந்து கூடி, ஆன்மிகச் சிலிர்ப்பும் ஆனந்த உணர்வும் அடையும் திருத் தலமாக ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயம் விளங்கி வருகிறது.

டாக்டர் நஞ்சுண்ட ராவ் பெயரால் அமைந்த லேட் டாக்டர் எம்.ஸி.என். பிரைவேட் ரெலிஜியஸ் டிரஸ்ட் என்ற அறக் கட்டளை ஸ்ரீ சக்கரை அம்மா ஆலயத்தைப் பராமரித்து வருகிறது. டாக்டர் ராவின் பேத்தி திருமதி சுமனா சுரேஷ் ஆலயத்தின் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

டாக்டர் ராவ் தமது குரு ஸ்ரீ சக்கரை அம்மாவின் ஆலயத்தினை அமைத்த போது. அதன் பராமரிப்பிற்குக் கணிசமான தொகையை ஒதுக்கி, அதன் மூலம் வருகின்ற வருவாயைக் கொண்டே ஆலயம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வரவேண்டும் என்றும், வெளியார் எவரிடமிருந்தும் நன்கொடைகளோ, அர்ச்சனை முதலானவற்றுக்குக் கட்டணமோ பெறலாகாது என்றும் உறுதிபட உயில் எழுதி வைத்தார். ஆலயத்திற்குக் கூடுதலாகத தொகை தேவைப்படும் போது தமது சந்ததியார் மட்டுமே அதனை ஏற்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார். இதற்கு இணங்க, ஆலய நிர்வாகம் எவரிடமிருந்தும் எதன் பொருட்டும் நன்கொடைகளை ஏற்பதில்லை. அர்ச்சனை அபிஷேகங் களை பக்தர்கள் பெயரால் செய்து அதற்குக் கட்டணம் பெறுவதும் இல்லை. எனினும், பக்த்ர்கள் தாமாக விரும்பி நேரில் மலர்களும் கனிகளும் சமர்ப்பிக்க வும், தீபம் ஏற்றவும் பிரசாதங்கள் தயாரித்துப் படைத்து வழங்கவும் முன் வந்தால் அது அனுமதிக்கப்படுகிறது.

பௌர்ணமி, திருவாதிரை ஆகிய தினங்களில் ஆலயத்தில் விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலையில் சிறப்பு ஆராதனை யும் ஆன்மிகப் பேருரைகளும் நிகழ்கின்றன.

ஆலயம் தினமும் காலை 6 முதல் 10 மணி வரையும் மாலையில் 4 முதல் 8 மணி வரையும் திறந்து வைக்கப்படுகிறது. எல்லா சுப தினங்களிலும் விசேஷ பூஜைகளும் நடைபெறுகின்றன.


ஸ்ரீ சக்கரை அம்மா ஆலயம்
லேட் டாக்டர் எம்..ஸி.என் பிரைவேட் ரெலிஜியஸ் டிரஸ்ட்
75 கலாக்ஷேத்ரா சாலை சென்னை 600 041
தொலைபேசி எண்: 2452 1236
நிர்வாகி: திருமதி சுமனா சுரேஷ்


++++